Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.164/2021

**Depositions of PW- 6**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.பெருமாள் | Occupation | ஓட்டுநர் |
| Father's name | மாயாண்டி | Calling | |
| Village | ரெங்கநாதபுரம் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th day of January 2026.

09.01.2026

1 முதல் 3 எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது ரெங்கநாதபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரிகளை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். கடந்த 12.09.2020 அன்று நான் ஆட்டோ ஸ்டாண்டில் உட்கார்ந்திருந்தபோது திருவண்ணாமலையை சேர்ந்த 3 நபர்கள் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். மேலும் ரெங்காதபுரத்தை சேர்ந்த 3 நபர்களும் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். மேற்படி இரு ஊரை சேர்ந்தவர்கள் மாறி மாறி அடித்துக்கொண்டார்கள். திருவண்ணாமலைக்காரர் ஒருவர் அடித்ததில் மாயாண்டி என்பவருக்கு கை ஒடிந்துவிட்டது. நான் மாயாண்டியை ஆட்டோவில் ஏற்றி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

மேற்படி திருவண்ணாமலை மற்றும் ரெங்கநாதபுரத்தை சேர்ந்த நபர்களில் ரெங்கநாதபுரத்தை சேர்ந்த நபர்களை எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி திருவண்ணாமலையை சேர்ந்த நபர்களின் பெயர் மற்றும் விவரங்கள் எனக்கு

தெரியாது என்றாலும் மேற்படி சம்பவத்திற்கு முன்பு நான் அவர்களை பார்த்ததில்லை என்றாலும் சரிதான். சம்பவ சமயத்தில் மேற்படி நபர்கள் திருவண்ணாமலையை சேர்ந்தவர்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். எங்களது ஆட்டோ ஸ்டாண்டானது இருளப்பசாமி கோவிலருகே உள்ளது. சம்பவ சமயத்தில் அங்கு 2 ஆட்டோக்கள் நின்று கொண்டிருந்தது. நாங்கள் 2 ஆட்டோ ஓட்டுநர்களும் சண்டையை விலக்கிவிட்டோமா என்றால் இல்லை. சம்பவமானது டீக்கடை முன்பு நடைபெற்றது. அந்த சமயத்தில் மேற்படி டீக்கடையில் 4 நபர்கள் உட்கார்ந்திருந்தார்கள். நான் யார் யாரை அடித்தார்கள் என்பதையும் யார் யார் சத்தம்போட்டார்கள் என்பதையும் பார்க்கவில்லை என்றால் சரிதான். என்னை மருத்துவமனைக்கு செல்வதற்காக மேற்படி மாயாண்டியின் மனைவி அழைத்தார். என்னை மருத்துவமனைக்கு அவர்கள் அழைத்தபோது மாலை சுமார் 05.30 மணி இருக்கும். நான் 5 நிமிடங்களில் அவர்களை மருத்துவமனையில் இறக்கிவிட்டேன் என்றால் சரிதான். மற்றபடி இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எந்த சங்கதிகளும் தெரியாது என்றால் சரிதான்.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.164/2021

**Depositions of PW- 7**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.முருகன் | Occupation | வியாபாரம் |
| Father's name | ராமையா | Calling | |
| Village | ரெங்கநாதபுரம் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th day of January 2026.

09.01.2026

1 முதல் 3 எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது ரெங்கநாதபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கறிக்கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். தேதி மாதம் போன்றவை எனக்கு நியாபகமில்லை. ஒரு நாள் நான் கடை வைத்திருக்கும் தெருவிற்கு பக்கத்து தெருவில் சண்டை நடந்ததாக கேள்விப்பட்டேன். போலீசார் வந்து 4 மால்களையும் அளந்துவிட்டு என்னிடம் கையெழுத்து கேட்டார்கள் நானும் கையெழுத்து செய்து கொடுத்தேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான். **பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து மட்டும் அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

போலீசார் என்னிடம் என் கடையில் வைத்து தான் கையெழுத்து பெற்றார்கள் என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்பது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையெழுத்து செய்துவிட்டு தற்போது பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.